# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2013 ஜுலை திங்கள் 31.07.2013–ம் நாள் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**30.05.2013–ம் தேதி நடைபெற்ற சாதாரணம் (ம) அவசரக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் :**
**பொருள் எண்.1**

குளச்சல் நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் 5 வது வார்டு உறுப்பினர் திரு.ஜேசுராஜன், 6 வது வார்டு உறுப்பினர் திருமதி அமலபுஷ்பம், 7 வது வார்டு உறுப்பினர் திரு.பென்சிகர் ஆகியோர் கொண்டு வரும் தீர்மானம்.

இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு பகுதியில் இயங்கி வந்த ரேசன் கடை K.V.T.C.M.S CC003 ரேசன் கடையானது கடந்த சுனாமி பேரழிவிற்கு பின்னர் இடவசதியின்மையால் கல்லுக்கூட்டம் பேரூராட்கிக்குட்பட்ட பாக்கியபுரம் பகுதிக்கு மாற்றம் செய்யப்பட்டு இதுநாள் வரை அப்பகுதியிலேயே செயல்பட்டு வருவதால், அக்கடையில் ரேசன் பொருள் வாங்கி வரும் மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். தற்போது கொட்டில்பாடு கோவில் அருகாமையில் ரேசன் கடை கட்டுவதற்கு தேவையான இடவசதியுள்ளதால் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு மேற்படி இடத்தில் ரேசன் கடை கட்டுவதற்கு மாவட்ட நிர்வாகத்தை கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்.628. K.S.S.S.காலனி அருகில் சமுதாயநல கூடம் அமைந்திருப்பதின் பக்கத்தில் ரேஷன்கடை கட்ட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில், சீம்பிளிவிளை, பர்னட்டிவிளை மற்றும் பாலத்தன்கரை ஆகிய பகுதிகளில் உள்ள 20 எண்ணம் ஆழ்துளை கிணறுகளிலிருந்து சராசரியாக நாள் ஒன்றுக்கு 18 மணி நேரம் நீர்மூழ்கி மோட்டார்களின் மூலம் குடிநீர் பெறப்பட்டு வினியோகம் செய்யப்படுகிறது.

மேலும் 20 ஆழ்துளை கிணறுகளிலிருந்து 10 எச்.பி. 19 எண்ணம் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 51,30,000 லட்சம் லிட்டர் தண்ணீர் பெறப்படுகிறது. 5 எச்.பி. 1 எண்ணம் மூலம் நாள் ஒன்றுக்கு 1,00,000 லட்சம் லிட்டர் தண்ணீர் பெறப்படுகிறது. மேலும் மொத்தமாக 52,30,000 லட்சம் லிட்டர் தண்ணீர் நாள் ஒன்றுக்கு 2 முறைக்கு மேல் 10 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் (மொத்த கொள்ளளவு 20.20 லட்சம் லிட்டர்) ஏற்றப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு குடிநீர் குழாய் இணைப்புக்கும் சராசரியாக 1200 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகம் பெறும் வாய்ப்புள்ளது.

ஆனால் தற்போது தாழ்வான பகுதிகளில் உள்ள வீடுகளில் உள்ளவர்கள் குடிநீரை தேவையான அளவுக்கு மேல் அதிகமாக விரையம் செய்யும் காரணத்தினால் மேட்டுப் பகுதியில் உள்ள குடிநீர் குழாய் இணைப்புக்கு சீராக தண்ணீர் கிடைக்கவில்லை.

எனவே அனைத்து மக்களுக்கும் சீராக குடிநீர் விநியோகம் செய்யும் வகையில் அனைத்து குடிநீர் குழாய் இணைப்புகளிலும் Flow control valve மற்றும் Water meter பொருத்தி உபயோகப்படுத்தும் குடிநீர் அளவுகளுக்கு ஏற்ப கட்டணம் வசூல் செய்யும் வகையிலும், அளவுக்கு அதிகமாக குடிநீர் உபயோகிக்கும் இணைப்புகளுக்கும் அளவுமானிகளின் அளவுப்படி கூடுதல் கட்டணம் வசூல் செய்யவும், மேலும் கீழ்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்யவும், மேலும் Flow control valve மற்றும் Water meter பொருத்தாத குடிநீர் குழாய் இணைப்புகளை கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| மாதம் ஒன்றுக்கு | 15,000 லிட்டர் வரை தற்போதைய கட்டணம் ( 50 + 2 ) ரூபாய் |

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/4337/2012)

**தீர்மானம் எண்.629. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்படாமல் தீர்மானம் ரத்து செய்யப்பட்டது.**

**27.06.2013–ம் தேதிய சாதாரணக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்கள்.**

**பொருள் எண். 1**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.30322/2012/இ3 நாள் 28.05.2013–ம் தேதிய கடிதத்தில் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக புதிய கட்டிடம் கட்டப்பட இருப்பதாகவும், அதற்காக குளச்சல் நகராட்சி கட்டிட சங்கத்தில் (Builder Society)–ல் உறுப்பினராகும் பொருட்டும், நகராட்சி சார்பாக நிதியினை மாநில நிதிக்குழு பரிந்துரையில் 3 தவணைகளில் பிடித்தம் செய்து கொள்ள இசைவு தெரிவித்து மன்ற தீர்மான நகல் அனுப்ப கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே மேற்படி பொருள் தொடர்பாக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.சி1/1858 /2013)

**தீர்மானம் எண்.630. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.158/செமதொ/2013 நாள் 14.05.2013–ல் தெரிவித்துள்ளபடி, இந்நகராட்சியின் 2012–13 –ம் ஆண்டு திட்ட நிதி ஒதுக்கீடு தொடர்பான விளம்பரத்தை 27.05.2013–ம் தேதிய தினத்தந்தி சாதனை மலரில் வெளியிட்ட வகையில் ரூ.5,600/–ஐ வழங்க கேட்டு தினத்தந்தி நாளிதழ், நாகர்கோவில் அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்ற அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2045/2012 )

**தீர்மானம் எண்.631. அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2012–13–ன்கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலை ஜங்சன், காந்தி ஜங்சன், பீச் துறைமுகம் செல்லும் ஜங்சன் மற்றும் பெரியப்பள்ளி ஜங்சன் ஆகிய பகுதிகளில் ரூ. 10,00,000/– மதிப்பீட்டில் சிறிய உயர் கோபுர மின்விளக்கு அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டை விட 14% குறைவாக (ரூ.8,60,000/–) ஒப்பந்தப்புள்ளி அளித்த Instapower Ltd, New Delhi நிறுவனத்திற்கு கடந்த 02.11.2012–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி பகுதிகளில் விளக்குகள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு, மின் இணைப்பும் வழங்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஆனால் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மின்விளக்குகளின் பாதுகாப்புக்கான

Fabrication work, MCB, Timer Controller arrangements ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படாமல் உள்ளதால் அவற்றை முடிக்க கேட்டு சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டது. ஆனால் இதுநாள் வரையிலும் பணிகள் முடிக்கப்படாமல் உள்ளதோடு, அது தொடர்பாக எவ்வித தகவலும் பெறப்படவில்லை. எனவே மீதமுள்ள பணிகளுக்கு மறுஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். .(ந.க.எண்.இ1/2924/2012 )

**தீர்மானம் எண்.632 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட வி.கே.பி.பள்ளி அருகில் உள்ள ஆழ்துளை கிணறு எண்.11 மற்றும் பாலத்தன்கரை கிணறு அருகில் உள்ள ஆழ்துளை கிணறு எண்.8 ஆகியவற்றில் உள்ள மோட்டார்களில் பழுது ஏற்பட்டதால் குடிநீர் வினியோகம் பாதிக்கப்பட்டது. எனவே ஆழ்துளை கிணறு எண். 11–ன் மோட்டாரை சரி செய்து இருப்பில் வைத்து விட்டு, அதற்கு மாற்றாக புதிய மோட்டார் வாங்கி பொருத்தவும், ஆழ்துளை கிணறு எண்.8–ன் மோட்டாரை சரி செய்து இறக்கவும் ரூ.70,000/–க்கு மதிப்பீடு தயார் செய்து, குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15–ன்கீழ் பணிகளை மேற்கொண்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ2/404/2013)

**தீர்மானம் எண்.633 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட குளச்சல் மெயின் ரோட்டில் ஆறுமுகா நகை கடையின் முன்புறம் அலுவலக நீர்த்தேக்க தொட்டியிலிருந்து வரும் பகிர்மான குழாயில் உடைவு ஏற்பட்டதால் அப்பகுதி மக்களுக்கு சீராக குடிநீர் வழங்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டது. எனவே மேற்படி இடத்தில் போடப்பட்டிருந்த 250mm AC Pipe –ஐ மாற்றிவிட்டு 250mm PVC Pipe –ஐ பொருத்துவதற்கு ரூ. 35,000/– க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15–ன்கீழ் பணியினை மேற்கொண்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ2/61/2013)

**தீர்மானம் எண்.634 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட மரமடி, பூக்குழி ஆகிய பகுதிகளில் சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு புதிதாக 2" PVC pipe line அமைக்கவும், அழகனார்கோட்டை விளையில் சுவிஸ் வால்வு அமைத்து குடிநீர் வினியோகத்தை கட்டுப்படுத்தவும், பாலத்தன்கரை குடிநீர் வினியோக குழாயில் ஏற்பட்ட உடைவை சரி செய்யவும் மற்றும் மாதா காலனி பெட்ரோல் பல்க் அருகில் குடிநீர் வினியோக குழாயில் ஏற்பட்ட உடைவை சரி செய்யவும் ரூ. 80,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15–ன்கீழ் பணியினை மேற்கொண்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ2/13/2013

**தீர்மானம் எண்.635 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில், மாதா காலனி சம்ப் மற்றும் சீம்பிளிவிளை ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறுகளில் உள்ள மோட்டார்களில் பழுது ஏற்பட்டதால் குடிநீர் வினியோகம் பாதிக்கப்பட்டது. எனவே மேற்படி பழுதுகளை சரி செய்வதற்கு ரூ.49,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15–ன்கீழ் பணியினை மேற்கொண்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ2/14/2013

**தீர்மானம் எண்.636 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சி ஒப்பந்தத்தாரர் திரு.சி.சிவதாணுமாலையன், ஒப்பந்தத்தாரருக்கு வழங்க வேண்டிய வைப்புத் தொகை (காலம் கடந்தவை ) ரூ.20,000/–, மற்றும் ரூ.21,386/– மொத்தம் ரூ.41,386/– ஐ நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வழங்கியதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.பி1/1881/13)

**தீர்மானம் எண்.637 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சி ஆழ்துளை கிணறு எண். 2 மற்றும் 5 ஆகியவற்றின் மோட்டார்கள் மற்றும் கேபிள்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்தல், சாம்பசிவபுரத்தில் **G.I.** குழாயில் ஏற்பட்டுள்ள கசிவை சரி செய்தல் மற்றும் லோப்பஸ் மண்டபம் அருகில் சுவிஸ் வால்வில் ஏற்பட்ட பழுதினை சரி செய்தல் ஆகிய பணிகளுக்கு ரூ.31,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15–ன்கீழ் பணியினை மேற்கொண்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.இ2/520/2013)

**தீர்மானம் எண்.638 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்குட்பட்ட 15–வது வார்டிலுள்ள கதவு எண்.15–92/1 –ன் குடிநீர் குழாய் இணைப்பு தற்போது பயன்பாட்டில் இல்லாத காரணத்தினால், மனுதாரர் மேற்கண்ட கட்டிடத்தில் உள்ள குடிநீர் குழாய் இணைப்பை தற்காலிகமாக துண்டிக்க கோரியுள்ளார். மேற்கண்ட கட்டிடத்தின் மீது வரி நிலுவை ஏதும் இல்லை. எனவே மனுதாரரின் வேண்டுகோள் ஏற்று மேற்கண்ட கட்டிடத்தில் உள்ள குடிநீர் குழாய் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ2/ 314/2013)

**தீர்மானம் எண்.639 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்குட்பட்ட 8–வது வார்டில் மரமடி பகுதியில் அமைந்துள்ள மீனவர் ஓய்வறையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,20,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 575, நாள் 30.05.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல்

அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 19.06.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | 0.56% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | 1.24% மதிப்பீட்டை விட கூடுதல். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.56% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1357/2013)

**<u>தீர்மானம் எண்.640 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.</u>**

**பொருள் எண். 12**

இந்நகராட்சிக்குட்பட்ட முகைதீன்பள்ளி பகுதியில் குளச்சல் பிச்ரோடு முகப்பிலிருந்து பண்டகசாலைபுரம் வரை வடிகால் ஓடை அமைத்து மூடு சிலாப் அமைக்கும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.6,00,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 564, நாள் 15.05.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 14.06.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | 0.04% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு.C.தேவகரிம் சேம்,<br>ஒப்பந்தத்தாரர் | 1.08% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1263/2013)

**<u>தீர்மானம் எண்.641 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.</u>**

**பொருள் எண். 13**

இந்நகராட்சிக்குட்பட்ட 10–வது வார்டில் க.எண்.10/67–ன் முன்புறம் அமைந்துள்ள பாலத்தை சரி செய்து பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.1,20,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.589, நாள் 30.05.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அத.ன்அடிப்படையில் 19.06.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவகரிம் சேம்,<br>ஒப்பந்தத்தாரர் | 1.82% மதிப்பீட்டை விட கூடுதல். |
| 2. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | 0.08% மதிப்பீட்டை விட குறைவு. |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.08% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T. ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2142/2013)

**தீர்மானம் எண்.642 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2012–13–ன்கீழ் ரூ.48,400/– மதிப்பீட்டில் இ.ந்கராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு–1,2, செக்காலத்தெரு, களிமார், பர்னட்டிவிளை, ஆசாத்நகர், குழந்தை ஏசுநகர் மற்றும் சிங்கன்காவு அங்கன்வாடி மையங்களில் எரிவாயு இணைப்பு அமைத்து நவீனப்படுத்தும் பணியை மேற்கொள்வதற்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.574, நாள் 30.05.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அத.ன் அடிப்படையில் 19.06.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | **0.83%** மதிப்பீட்டை விட கூடுதல். |
| 2. | திரு.C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டு விகிதம். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1356/2013)

**தீர்மானம் எண்.643 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் தெரு நாய்களுக்கு கருத்தடை செய்து பராமரிப்பதற்கு, தொலைபேசி நிலைய சாலையில் கால்நடை மருத்துவமனைக்கு அருகில் புதிதாக கொட்டகை அமைத்து இரண்டு அறைகள் அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.68,000/– க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 566, நாள் 15.05.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 14.06.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவகரிம் சேம்,<br>ஒப்பந்தத்தாரர் | **1.68%** மதிப்பீட்டை விட அதிகம். |
| 2. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | **0.02%** மதிப்பீட்டை விட குறைவு. |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T. ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/856/2013)

**தீர்மானம் எண்.644 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சிக்குட்பட்ட 16–வது வார்டில் உள்ள கதவு எண்.24/13 எண் கொண்ட கட்டிடத்தில் உள்ள குடிநீர் குழாய் இணைப்பு வணிக பயன்பாட்டில் உள்ளது. தற்போது மனுதாரர் மேற்கண்ட குடிநீர் குழாய் இணைப்பை குடியிருப்புக்கு பயன்படுத்தி வருவதால் மேற்கண்ட கதவு எண்ணில் உள்ள குடிநீர் குழாய் இணைப்பையும் வணிக பயன்பாட்டில் இருந்து குடியிருப்பு பயன்பாட்டிற்கு மாற்றுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/554/2013)

**தீர்மானம் எண்.645 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு (ஆண், பெண்) கீழ்க்கண்ட பாதுகாப்பு கவசங்கள் வாங்க உத்தேச செலவுத் தொகை ரூ.98,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>தேவையான உபகரணங்கள்</u>

(1) கையுறை
(2) காலுறை
(3) பாதுகாப்பு தொப்பி
(4) ரெயின் கோட்டு
(5) ரெயின் கோட்டு தொப்பியுடன்
(6) மிளிரும் ராக்கெட்
(7) முகவுறை

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/2860/2006)

**தீர்மானம் எண்.646 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான கிருமி நாசினிகள் இருப்பில் இல்லாத காரணத்தால் பொது சுகாதார பயன்பாட்டிற்கு தேவையான கீழ்காணும் பொருட்களை வாங்குவதற்கும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.98,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | பிளீச்சிங் பவுடர் | 1000 கிலோ |
| 2 | கறுப்பு பினாயில் | 250 லிட்டர் |
| 3 | நீர்த்த சுண்ணாம்பு துாள் | 2500 கிலோ |

**அ.குறிப்பு :** அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்றதை மன்றம் அங்கீகரிக்கலாம் .(ந.க.எண்.எச்1/1388/2009)

**தீர்மானம் எண்.647 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மீன் மார்கெட், மட்டன் மார்கெட் மற்றும் பஸ் நிலைய வணிக நிறுவனங்கள் அதிகமாக உள்ள மெயின்ரோடு பகுதிகள், உரக்கிடங்கு போன்ற பகுதிகளில் தற்போதைய மழைக்காலத்தை தொடர்ந்து, ஈக்கள் தொல்லை அதிகமாக உள்ளதால் மேற்படி பகுதிகளில் மருந்து தெளிப்பதற்கு தேவையான நுவான் மருந்து வாங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.5,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1243/2013)

**தீர்மானம் எண்.648 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20**

இந்நகராட்சி காம்பேக்டர் வாகனம் TN-75-L-2565 கிளட்ச் பழுதடைந்து விட்டதால், அவசர அவசியம் கருதி ரூ.12,800/– மதிப்பீட்டில் அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15–ன்கீழ் பணியினை மேற்கொண்டு பட்டியல் தொகை வழங்கிய விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.எச்1/1841/2013)

**தீர்மானம் எண்.649 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 21**

குளச்சல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் மினி லாறி TN-74-T-5508–ன் தகுதி சான்று புதுப்பிக்க தேவையான பழுதுகள் சரி செய்ய ரூ.45,000/–க்கு நகர்மன்ற தீர்மானம் எண்.552 நாள் 15.05.2013–ல் அனுமதி வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 20.06.2013–ல் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| | | |
|---|---|---|
| 1 | மணி மோட்டார் ஒர்க்ஸ்,<br>ஒழுகினசேரி, நாகர்கோவில். | ரூ.<br>44,550/– |
| 2 | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ்,<br>நாகர்கோவில். | 43,750/– |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவானது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.எச்1/2913/2009)

**தீர்மானம் எண்.650 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 22**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான கிருமிநாசினிகள் (பிளீச்சிங் பவுடர், பினாயில், சுண்ணாம்புத் தூள் ஆகியவை வாங்க உத்தேச செலவுத் தொகை ரூ.98,000/– இந்நகர்மன்ற தலைவர் 03.06.2013 –ல் முன்அனுமதி வழங்கியுள்ளார். அதன் பேரில் 20.06.2013–ம் தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படடுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | பிளீச்சிங் பவுடர் கிலோ 1–க்கு (ரூபாய்) | சுண்ணாம்புதூள் கிலோ 1–க்கு (ரூபாய்) | கறுப்பு பினாயில் லிட்டர் 1–க்கு (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1 | ஜெயபாபா டிரேடர்ஸ் | 29/– | 7.50 | 47/– |
| 2 | சண்முகா கெமிக்கல்ஸ் | 31/– | 8.00 | 49/– |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஜெயபாபா டிரேடர்ஸ் என்பவரது ஒப்பந்தப்புள்ளி குறைவானது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஜெயபாபா டிரேடர்ஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஜெயபாபா டிரேடர்ஸ் என்பவருக்கு வினியோக உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.எச்1/1388/2009)

**தீர்மானம் எண்.651 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**27.06.2013–ம் தேதிய அவசரக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்கள்.**

**பொருள் எண். 1**

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் 2010–ம் ஆண்டு தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, ஒவ்வொரு நபருடைய கைரேகை, விழித்திரை, புகைப்படம் பதிவு செய்ய முகாம் நடைபெற்றதில் பொதுமக்களுக்கு அறிவிப்பு செய்த வகை மற்றும் இதர செலவுகள் மேற்கொண்டமைக்கு ரூ.19,306/– நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.அ2/3629/2012)

**தீர்மானம் எண்.652 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 08.06.2013–ம் தேதிய ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி, இந்நகராட்சிக்கு சொந்தமான அனைத்து அரசு கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.1,50,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2134/2013)

**தீர்மானம் எண்.653 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்கு ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2011–12–ன்கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக 2 எண்ணங்கள் CCT-Cargo Tipper வினியோகம் செய்வதற்கான மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மாநில அளவிலான பத்திரிகைகளான Trinity Mirror மற்றும் Jana Sakthi ஆகியவற்றில் வெளியிட்ட வகையில் ரூ.83,372/– ஐ வழங்க கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/7057/2011)

**தீர்மானம் எண்.654 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் வார்டு எண்.13 மற்றும் 14–க்கு உட்பட்ட பகுதியில் கடற்கரை ஓரமாக அமைந்துள்ள மீனவர் ஓய்வறை தரைப்பகுதி மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்வது, பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1808/2013

**தீர்மானம் எண்.655 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட 8–வது வார்டு கதவு எண்.9/60 வீட்டின் அருகில் மழை காலங்களில் தண்ணீர் வெளியே செல்ல முடியாமல் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படும் வகையில் உள்ளதால் பொதுமக்கள் நலன் கருதி மேற்படி இடத்தில் வடிகால் ஓடை அமைத்து பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.4,00,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2006/2013)

**தீர்மானம் எண்.656 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட 21–வது வார்டில் இக்பால் தெருவில், கதவு எண்.30/19–க்கு வடக்காக உள்ள குறுக்கு சந்தில் வடிகால் ஓடை மற்றும் குடிநீர் குழாய் வசதிகள் இல்லாத காரணத்தால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். எனவே அப்பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் மேற்படி பகுதியில் வடிகால் ஓடை மற்றும் குடிநீர் குழாய் பதிக்கும் பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ. 2,00,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1268/2013)

**தீர்மானம் எண்.657 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7–ல் ஜோசப் பெனடிக்ட் காலனியில் புதிதாக மீனவர் ஓய்வறை கட்டுவதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,00,000/–க்கு, மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2132/2013)

**தீர்மானம் எண்.658 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு சீராக குடிநீர் வழங்குவதற்கு மண்டலம் –II க்கான வருடாந்திர பராமரிப்பு பணிகளை ரூ.2,50,000/– மதிப்பீட்டில் மேற்கொள்வதற் 19.06.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின் ஜோஸ், ஒப்பந்தத்தாரர் | **0.55%** மதிப்பீட்டை விட அதிகம். |
| 2. | திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரர் | **0.46%** மதிப்பீட்டை விட குறைவு. |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.46% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசரம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1222/2013)

**தீர்மானம் எண்.659 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23–ல் சாஸ்தான்கரை மெயின் ரோட்டிலிருந்து சிங்கன்காவுக்கு செல்லும் குறுக்கு தெருவில் அமைந்துள்ள வடிகால் ஓடையில் மழைநீர் தேங்கி வெளியே செல்ல முடியாமல் உள்ளதால் சுகாதார சீர்கேடு உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்படி தெருவில் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ. 1,80,000/–க்கும், மேற்படி பணியினை மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2135/2013)

**தீர்மானம் எண்.660 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு சீராக குடிநீர் வழங்குவதற்கு குடிநீரின் கொள்ளளவை பொறுத்து 10 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைந்துள்ள பகுதிகளை 2 மண்டலங்களாக பிரித்து 2013–14–ம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும், அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.6,00,000/–க்கும் இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.565, நாள் 15.05.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் மண்டலம் 1 –க்கான வருடாந்திர பராமரிப்பு பணிகளை ரூ.3,50,000/– மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 19.06.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.R.தேவராஜ்<br>ஒப்பந்தத்தாரர் | **0.06%** மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு.P.தங்கமணி<br>ஒப்பந்தத்தாரர் | **0.79%** மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.06% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.R.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசரம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1222/2013)

**தீர்மானம் எண்.661 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>சாதாரணக்கூட்டப் பொருள்</u>

**பொருள் எண்.1**

இந்நகராட்சியில் சொத்துவரி மறுசீராய்வு **2008–09–**ஆம் வருடம் மேற்கொள்ளப்பட்டதில் **24** வார்டுகளிலும் தெருப்பெயர் பதியப்பட்டு மண்டலங்கள் பிரிக்கப்பட்டது. அதில் வார்டு எண். **21** மற்றும் **22** (மொர்க்கண்டைல் வங்கியிலிருந்து கதவு எண்.30–35/C1 வரை) இக்பால் தெரு என வார்டு 22–ல் மட்டும் உள்ளது. வார்டு எண்.21–ல் இத்தெரு விடுபட்டுள்ளதால் வரிவிதிப்பு செய்யும் போது தெரு பெயர் மாறுபடுகிறது. எனவே வார்டு எண்.21–ல் இக்பால் தெரு சேர்க்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்ற அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.அ1/4826/2007)

**தீர்மானம் எண்.662 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

சொத்துவரி சீராய்வு 2008–09 முதல் இந்நகராட்சி பகுதிகளிலுள்ள முக்கிய சாலைகள், சந்திப்பு சாலைகள், குடியிருப்பு பகுதிகள் மண்டலங்களாக பிரிக்கப்பட்டது. அதில் மண்டலம் B –ல் குளச்சல் – கருங்கல் ரோடு வார்டு எண்.16, 17–ல் இம்மண்டலம் வருகிறது. வார்டு எண்.16–ல் மண்டலம் B –ஐ தவறுதலாக மண்டலம் A –என பிரிக்கப்பட்டுள்ளது. எனவே வார்டு எண். 16–ல் மண்டலம் B –ஐ சேர்த்து அதனடிப்படையில் சொத்துவரி விதிப்புகள் நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** சொத்துவரி விதிப்பில் மண்டலம் தவறுதலாக உள்ளதை மாற்றி அமைக்கலாம். தவறுதலாக உள்ள மண்டலத்தின்படி வரிவிதிப்புகள் செய்யப்பட்டதை திருத்தம் செய்து மண்டலம் B –படி நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.அ1/4826/2007)

**தீர்மானம் எண்.663 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலை பக்கம் அமைந்துள்ள வெள்ளை ரோஜா சுயஉதவிக் குழு கடைக்கு குத்தகை காலம் 31.12.2012–வுடன் முடிவடைந்துள்ளது. மேற்படி கடைக்கு 01.01.2013 முதல் 31.12.2015 முடிய மூன்றாண்டு காலத்திற்கு உரிமத்தினை நீட்டிப்பு செய்யவும், தற்போதைய வாடகைத் தொகையில் 15% உயர்வு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.எச்1/2035/2002)

**தீர்மானம் எண்.664 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தில் அமைந்துள்ள கடை எண்.38–க்கு 31.10.2012–வுடன் உரிமம் முடிவடைந்துள்ளதால் 01.11.2012 முதல் 31.10.2015 முடிய மூன்றாண்டு காலத்திற்கு கடை வாடகை உரிமம் நீட்டிப்பு செய்தும், தற்போதைய வாடகைத் தொகையில் 15% உயர்வு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.எச்1/2035/2002)

**தீர்மானம் எண்.665 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

நகர்மன்ற தீர்மானம் எண்.1602 நாள் 28.02.2011 –ன்படி நகராட்சி பிறப்பு இறப்பு பதிவுகளை 2003 மே வரை உள்ள பதிவுகளை கணனியில் பதிவு செய்வதற்கு யூனிக்யு நிறுவனத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆனால் மேற்படி நிறுவனத்தார் மொத்த பதிவுகள் 51358–ல் 25103 பதிவுகள் மட்டுமே பதிவு செய்து விட்டு மீதமுள்ள பதிவுகளை தற்போது வரை பதிவு செய்யவில்லை. எனவே மேற்படி நிறுவனத்தினருக்கு வழங்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யவும், மீதமுள்ள பதிவுகளை கணனியில் பதிவு செய்ய பெறப்பட்ட புதிய நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு :

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | பதிவு 1–க்கு<br>ரூ. பை. |
|---|---|---|
| 1 | Abacus Computech | 2.80 |
| 2 | Networks System | 2.90 |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Abacus Computech நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** 1) குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Abacus Computech நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

2) மேற்படி பிறப்பு பதிவுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு பதிலாக தவறுதலாக விலைப்புள்ளி பெறப்பட்டு நகர்மன்ற அனுமதி வேண்டி 15.05.2013—ம் தேதிய கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டதால், தீர்மானம் எண்.561 நாள் 15.05.2013ஐ மன்றம் ரத்து செய்யலாம்.

(ந.க.எண்.எச்1/3150/2009)

**தீர்மானம் எண்.666 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. 15.05.2013. தீர்மான எண்.561ஐ ரத்து செய்யப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்குட்பட்ட 23—வது வார்டு சிங்கன்காவு பகுதியில் நகரபுல எண். P2- 2/3—ல் 3 சென்ட் 825 ச.லிங்ஸ், P2- 2/2—ல் 1 சென்ட் 750 ச.லிங்ஸ், புல எண். P2- 2/4—ல் 2 சென்றும், புல எண்.P2-2/9—ல் 1 சென்ட் 750 ச.லிங்ஸ்—ம் சேர்த்து 9.325 சென்ட் இடத்தினை வழிபாதைக்காக திருமதி.நசீமா, க/பெ.கிளிர் முகம்மது, க.எண்.38—I இடலாக்குடி, என்ற முகவரியில் வசித்து வருபவர், தானபத்திரம் எண். 1176/2013—ன்படி, இந்நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளார். எனவே மேற்படி இடத்தினை நகராட்சிக்கு சொந்தமாக ஏற்றுக்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மேற்படி இடத்தினை ஏற்றுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். tpi/2283/2013)

**தீர்மானம் எண்.667 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பிற்கு தேவையான 70 எண்ணங்கள் மீட்டர் பெட்டிகள் வாங்குவதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.1,40,000/— க்கு இந்நககர் மன்றம் தனது தீர்மானம் எண். 567, நாள் 15.05.2013—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 16.07.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.Lenex,<br>Tamil Nad Agency,<br>71, New Colony, Thoothukudi. | 12.5% மதிப்பீட்டை விட அதிகம்.<br>(ரூ. 1,57,500/— ) |
| 2. | M/s.JES Electricals,<br>Trinity Complex, Main Road,<br>Trituapuram. | மதிப்பீட்டு விகிதம்<br>(ரூ.1,40,000/— ) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.JES Electricals, திருத்துவபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/5044/2011)

**தீர்மானம் எண்.668 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் மற்றும் ஏனைய திட்டங்களின் கீழ் நடைபெற்று வரும் பணிகளின் முன்னேற்ற அறிக்கை குறித்த விவர அட்டவணை Nylam sheet Board தயார் செய்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.4,750/—க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.580, நாள் 30.05.2013—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல்

அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 03.06.2013 அன்று உள்ளூர் விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி. தேவராஜ்,<br>சேனம்விளை,<br>பெத்தேல்புரம் அஞ்சல். | ரூ. 4,750/– |
| 2. | திரு.பி. தங்கமணி,<br>மார்க்கெட் ரோடு,<br>குளச்சல். | ரூ. 5,000/– |
| 3 | திரு.சி.சந்திரசேகர்,<br>கறுக்கன்குழி,<br>திக்கணங்கோடு அஞ்சல். | ரூ. 4,900/– |

மேற்காணும் மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தில் விலைப்புள்ளி அளித்துள்ள திரு.சி.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் விலைப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1706/2013)

**தீர்மானம் எண்.669 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை சிறப்பாக செயல்படுத்துவதற்காக, ஒரு வார்டுக்கு 4 எண்ணங்கள் வீதம் 24 வார்டுகளுக்கு தேவையான 96 எண்ணங்கள் 120 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு சக்கரம் மற்றும் மேல்மூடியுடன் கூடிய HDPE பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகள் வாங்குவதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.6,10,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2464/2013)

**தீர்மானம் எண்.670 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்படாமல் தீர்மானம் ரத்து செய்யப்பட்டது.**

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்கு சொந்தமான மினி லாரி TN 74-T-5508 நான்கு டயர்களும் தேய்மானம் ஏற்பட்டு வாகனம் இயக்க முடியாமல் உள்ளதால் புதிதாக 4 டயர்கள் வாங்கி பொருத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ. 45,800/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/2913/2013)

**தீர்மானம் எண்.671 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN 75-K-6526 –க்கு இஞ்சின் ஆயில், ரேடியேட்டர் தண்ணீர் மாற்றுதல் மற்றும் வீல் அலாய்மென்ட் செய்த வகையில் செலவு செய்யப்பட்ட ரூ.2,359/– ஐ சம்மந்தப்பட்ட ஓட்டுநருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/7057–1/2011)

**தீர்மானம் எண்.672 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் TN 75-L-2565 வாகனத்தை தினமும் சுத்தம் செய்ய 1.5 மீட்டர் நீளமுள்ள 1" பிளாஸ்டிக் பைப் வாங்கிய வகையில் ரூ.**924/–** வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1841/2013 )

**தீர்மானம் எண்.673 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

இந்நகராட்சிக்கு சொந்தமான காம்பேக்டர் லாறி TN 75-L-2565 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நகராட்சி சட்டம் பிரிவு **15–**ன்கீழ் பணியின் அவசரம் அவசியம் கருதி பழுது நீக்கம் செய்த வகையில் ரூ.**3,700/–** வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பணி அவசரம் கருதி நகராட்சி பிரிவு 15–ன்கீழ் பழுதுகளை சரி செய்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.எச்1/1841/2013)

**தீர்மானம் எண்.674 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய உள்பக்கம் பயணிகள் இருக்கைகள் அமைத்து பராமரித்தல், குடிநீர் வசதி, பேருந்து கால அட்டைவணை அமைத்து பராமரித்தல், குப்பைக்கூடைகள் மற்றும் விளக்கு வசதிகள் மேற்கொள்ளுதல் மற்றும் நகராட்சி அலுவலகம், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம், காவல் நிலையம் ஆகியவற்றிலிருந்து பேருந்து நிலையத்தை கண்காணிக்கும் வகையில், கண்காணிப்பு கேமரா பொருத்துதல் போன்ற பணிகள் செய்யவும், அதற்கு ஈடாக பேருந்து நிலைய தூண்கள் மற்றும் சுற்றுச் சுவர்களில் விழிப்புணர்வு வாசகங்களுடன் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் நகராட்சிக்கு ரூ.25,000/– செலுத்தி பணிகள் மேற்கொள்ள, தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் ரூ.3,360/–வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1403/2013)

**தீர்மானம் எண்.675 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2013 ஜுலை திங்கள் 31.07.2013–ம் நாள் புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சிக்குட்பட்ட 12 மற்றும் 13–வது வார்டு துறைமுகத்தெருவில் கடலரிப்பு தடுப்பு சுவர் கட்டப்படும் இடத்தில் மழைநீர் மற்றும் கழிவுநீர் வெளியே செல்ல முடியாமல் தேங்கி நிற்பதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு பொதுமக்களுக்கு நோய்கள் பரவும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி இடத்தில் தேங்கி நிற்கும் கழிவுநீரை Root Zone Method முறையில் சுத்திகரித்து கடலில் சேர்த்திடும் வகையில் பணியினை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டு தொகை ரூ. 4,20,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அ.குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2257/2013)

**தீர்மானம் எண்.676 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சியில் தெருவிளக்குகள் ON - OFF செய்வதற்கு 67 சுவிட்சுகள் உள்ளன. அவற்றில் 15 எண்ணங்களில் தானியங்கி சுவிட்சுகள் பொருத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 52 சுவிட்சுகளில் தானியங்கி சுவிட்சுகள் பொருத்தப்பட வேண்டியுள்ளது. ஏற்கனவே CFL, LED விளக்குகள் பொருத்தப்பட்டதின் காரணமாக மாதம்தோறும் சுமார் 15% முதல் 20% வரை மின்சாரம் சேமிக்கப்படுகிறது. மேலும் மின்சாரத்தை சேமிக்கும் பொருட்டு, குழல்விளக்குகள், சோடியம் ஆவி விளக்குகள், மெட்டல் ஹாலஜன் விளக்குகள் ஆகியவற்றை மாற்றி படிப்படியாக CFL மற்றும் LED விளக்குகள் பொருத்துவதற்கும், இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தால் தானியங்கி சுவிட்சுகள் பொருத்துவதற்கும் ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.24,00,000/–க்கும், மேற்படி பணியை திட்ட நிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அ.குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2750/13)

**தீர்மானம் எண்.677 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சி காமராஜர் பேருந்து நிலைய அருகாமையில் அமைந்துள்ள படிப்பகத்தை தற்காலிகமாக கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடைகளில் மாற்றம் செய்வதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் செய்வதற்கும், வணிக வள஗க மாடிப்படிகள் நான்கிலும் கிரில்கேட் அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2,20,000/– க்கு இந்நககர் மன்றம் தனது தீர்மானம் எண். 492, நாள் 31.01.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 25.07.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | **0.02%** மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு.C.சந்திரசேகர்,<br>ஒப்பந்தத்தாரர் | 1.42% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/4647/12)

**தீர்மானம் எண்.678 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்கு சொந்தமான இந்திரா காலனி குப்பைகள் கொட்டுமிடத்தில் வாகனங்கள் உள்ளே செல்லுமிடம் குண்டும், குழியுமாக உள்ளதாலும், மழை காலங்களில் மேற்படி இடம் சேறும், சகதியுமாக காணப்படுவதால் வாகனங்களில் டயர்கள் அவற்றில் சிக்கி குப்பைகளை கொட்டுவதில் சிரமங்கள் ஏற்பட்டு வருகிறது. எனவே வாகனங்கள் எளிதாக உள்ளே செல்வதற்கு ஏதுவாக சிவப்பு கிராவல் கொண்டு மேடு பள்ளங்களை நிரப்பி ஓரடுக்கு ஜல்லி வைத்து தளம் அமைப்பபற்கு ( WBM I-st layer) ரூ. 40,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி இந்நககர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டு விகிதம் |
| 2. | திரு.C.சந்திரசேகர்,<br>ஒப்பந்தத்தாரர் | 0.75% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.40,000/–க்கு, இந்நககர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.இ1/2258–1/13)

**தீர்மானம் எண்.679 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளை அருகில் அமைந்துள்ள மூன்று ஆழ்துளை கிணறுகளிலிருந்து மின்மோட்டார் மூலம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றுவதற்காக புதிதாக வாங்கப்பட உள்ள 62.50 KVA ஜெனரேட்டருக்கு பாதுகாப்பு அறை அமைப்பதற்கும், கேபிள் பதிப்பதற்கும் ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2524–1/13)

**தீர்மானம் எண்.680 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்கு சொந்தமான மினிலாறி TN-74-T-5508–க்கு தகுதிச்சான்று பெற வாகன புகை பரிசோதனை மற்றும் ஸ்டிக்கர் ஒட்டிய வகைக்கு ரூ. 940/– வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/ 2913/13)

**தீர்மானம் எண்.681 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள ஏ.வி.எம்.கால்வாய் மற்றும் பாம்பூரி வாய்க்காலில் கழிவுநீர் கலப்பதை தவிர்க்கும் பொருட்டும், கடல்நீர் உட்புகுவதை தடுக்கும் பொருட்டும், நிலத்தடி நீர் மாசுபடுவதை தவிர்க்கும் பொருட்டும் பாம்பூரி வாய்க்கால் நீரை தடுப்பணை மூலம் கிழக்கு பக்கமாக திருப்பி ஏ.வி.எம்.கால்வாய் வழியாக வெட்டுமடை பகுதியில் கடலில் கலக்கும் வகையில் கீழ்க்காணும் திட்டங்களை செயல்படுத்துவதற்கு பொதுப்பணித் துறையிடம் அனுமதி பெற்று அரசு நிதி ஒதுக்கீடு பெறவும், மேற்படி பணிகள் நகராட்சி மூலம் செயல்படுத்தவும் அரசுக்கு கருத்துரு அனுப்புவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சிங்கன்காவு கால்வாயை சுத்தப்படுத்தி மூடியுடன் கூடிய ஓடை மற்றும் சாலை வசதிகள் செய்தல். | 225.00 |
| 2. | பாம்பூரி வாய்க்கால் இருபக்க சுவர்கள் மற்றும் படித்துறைகள் சீரமைத்தல். | 230.00 |
| 3 | பாம்பூரி வாய்க்கால் பகுதியில் களிமார் பாலம் அருகில் நரிக்கல், மாதாகாலனி, சைமன்காலனி பாலம் அருகில் மற்றும் துறைமுகத்தெரு பொழிமுகம் அருகில் 5 இடங்களில் தடுப்பணை அமைத்தல். | 120.00 |
| 4. | ஏ.வி.எம். கால்வாய் சைமன்காலனி பாலம் முதல் வெட்டுமடை வரை பக்கசுவர் அமைத்தல். | 240.00 |
| 5. | ஏ.வி.எம். கால்வாய் பகுதியில் ஏசுதாஸ் காலனி, சாம்பசிவபுரம், சிங்காரவேலர் காலனி, கொட்டில்பாடு (2 இடங்கள்), நவஜீவன் காலனி, அந்தோணியார் காலனி, இந்திரா காலனி, மரமடி ஆகிய 9 இடங்களில் பாலத்துடன் கூடிய செக் டேம் அமைத்தல். | 225.00 |
| 6. | பெரியப்பள்ளியிலிருந்து வரும் மழைநீரை இந்திரா காலனி அருகில் கடலில் கலக்கும் வகையில் வடிகால் ஓடை அமைத்தல். | 60.00 |
| 7 | இந்நகராட்சிக்குட்பட்ட 4 இடங்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல். | 100.00 |
| 8 | இந்நகராட்சிக்குட்பட்ட பீச் சந்திப்பு பகுதியில் பாலம் அமைத்தல், மரமடி, கொட்டில்பாடு மற்றும் காணிக்கை மாதா Ice Plant முன்புறம் ஆகிய இடங்களில் பூங்கா அமைத்தல். | 60.00 |
| | **மொத்தம்** | **1260.00** |

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2529/13)

**தீர்மானம் எண்.682 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட கடற்கரை கிழக்கு பகுதியில் துறைமுகப் பாலம் அருகில் கடல்சார் வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் சுற்றுலாப் பயணிகள் மற்றும் வெளிநாட்டவரை கவரும் வகையில் கடற்கரையின் அழகை மேம்படுத்தவும், இருக்கை வசதி மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் செய்வதற்கும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக பத்திரிக்கைகளில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளது. எனவே கடற்கரை பகுதியில் 10 x 25 M அளவில் சுமார் 60 இலட்சம் செலவில் பூங்கா அமைப்பதற்கு கடல்சார் வாரியத்திடம் அனுமதி கேட்வும், திட்ட நிதியில் மேற்படி பணி மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2530/13 )

**தீர்மானம் எண்.683 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சிக்குட்பட்ட KSSS காலனி, பர்னட்டிவிளை மற்றும் மாதாகாலனி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளின் மேல் இரவு நேரங்களில் அடையாளம் தெரியாத சில நபர்கள் ஏறுவதாக தொடர்ந்து புகார்கள் வரப்பெற்றுள்ளதால், குடிநீரின் பாதுகாப்பு கருதி பர்னட்டிவிளை மற்றும் மாதாகாலனி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை சுற்றி சுற்றுசுவர் அமைக்கவும், மேலும் IUDM 2012-13 திட்டத்தின்கீழ் அடித்தளம் (Foundation) கட்டும் பணி முடிக்கப்பட்ட KSSS காலனி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு சிமென்ட் கற்களால் சுற்றுசுவர் கட்டி வேலி அமைப்பதற்கும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.7,80,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2524/13 )

**தீர்மானம் எண்.684 அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி